IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.206/2010
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.1 சாட்சி சக்கரவர்த்தி த.பெ.துரைப்பாண்டியன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 26.02.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் இந்த வழக்கில் தரப்பினர் கிடையாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கு தெற்கே என் மனைவிக்கு பாத்தியப்பட்ட வீடுதான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடு எனது மனைவி கிரையம் பெற்ற பத்திரங்களில் உள்ள அளவுப்படி கட்டிடம் கட்டிக்கொண்டார் என்றால் வீடும், காலி இடமும் உள்ளது. மேற்படி வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தது எனது மனைவிதான் என்றால் சரிதான்.

2. என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் ஒரு தரப்பினராக இல்லாத நிலையில் எனது மனைவிக்காக சாட்சியம் அளிக்க என் மனைவியிடம் பவர் பத்திரம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். நான் காவல்துறை அதிகாரியாக பணிபுரிகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 115/3 ஆகும். அதில் 1 ஏக்கர் 22 செண்டு

கட்டுப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மேல்புறம் 41 செண்டு 1ம் வாதி தகப்பனார் சுப்பையாசேர்வைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

3. சுப்பையாசேர்வை இறப்புக்கு பிறகு அந்த சொத்தை அவருடைய வாரிசுகள் அடைந்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அசல் வழக்கை முதலில் தாக்கல் செய்தது 1ம் வாதி என்றாலும் மேற்படி அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது 1ம் வாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 1ம் வாதியின் வாரிசுகள்தான் மற்ற வாதிகள் என்றால் சரிதான். தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 41 செண்டில் வடபுறம் உள்ள 5 செண்டு நிலம்தான் தாவா சொத்து என்றால் அது நடைப்பாதை ஆகும். தாவா சொத்து நடைபாதை என்பதற்கு வருவாய்துறை ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

4. தாவா சொத்து பொதுநடைபாதை கிழமேல் எவ்வளவு இருக்கும் என்றால் தென்வடலாக 21 அடியும், கிழமேலாக 130 அடி இருக்கும். வாதி பிராதில் என்ன விபரம் சொல்லியுள்ளார், என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரம் தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரியாது. தென்வடலாக உள்ள 21 அடிக்கும் வடக்கே வீடுகள்தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டுக்கு தலைவாசல் மேற்கேயும், கிழக்கேயும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீடுகளுக்கு தெற்கே பெரிய காம்பவுண்டு சுவர் உள்ளது என்றால் வீடு அத்துமாலில்தான் உள்ளது.

5. மேற்படி வீடு காம்பவுண்டு சுவர்தான் உள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வடக்கே உள்ள வீடுகளில் உள்ள வாசல் எதுவும் தெற்கே உள்ள பாதையை நோக்கி இல்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கு நான்குமால் வடக்கே சர்வே எண்.119க்கு கட்டுப்பட்ட சொத்து

என்று சொல்லியுள்ளார்கள் என்றால் நினைவில் இல்லை. தாவா சொத்து 5 செண்டுக்கு கிழக்கே சர்வே எண். 115/3 ல் கட்டுப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். ஒரு கிராம அதிகாரிக்கு பாத்தியப்பட்டதாகும். தாவா சொத்திற்கு தெற்கே எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்றால் சரிதான்.

6. மேற்கே சாலை உள்ளது என்றால் சரிதான். எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட வீட்டுக்கு பாத்தியப்பட்ட தலைவாசல் மேற்கு பக்கமும், வடக்கு பக்கமும் உள்ளது என்றால் வடக்கு பக்கம் மட்டுமே உள்ளது. எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் மேற்கு பக்கமும், வடக்கு பக்கம் உள்ள தலைவாசல் நாங்கள் அமைத்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

7. எனது மனைவிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கு பட்டா உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவாக உள்ளது. மேற்படி பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி கூட்டுப்பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் நினைவில் இல்லை. கூட்டுப்பட்டாவில் உள்ள பழனிச்சாமி என்ற ராஜா பெயரும் உள்ளது மேற்படி விபரம் தெரிந்துக்கொண்டு யார் பெயரில் கூட்டுப்பட்டா உள்ளது என்பது நினைவில் இல்லை என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. சர்வே எண்.115/3 ல் கட்டுப்பட்ட சொத்துக்களுக்கு உரிய பட்டா என்னிடம் காட்டப்படுவது என்றால் அது அசல் ஆவணமாக காணப்படவில்லை. மேற்படி பட்டாவில் இரத்தினசாமி மனைவி உட்பட 9 நபர்களின் பெயர்களில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் அது அசல் ஆவணமாக காணப்படவில்லை.

9. தாவா சொத்து பாதைதான் என்று எதிர்கோரிக்கை பரிகாரம் எதுவும் எனது மனைவி கேட்டுள்ளாரா என்றால் பாதையை உறுதிப்படுத்த ஆவணங்கள் உள்ளது. வாதிகள் எழுதிகொடுத்த ஆவணத்தை தவிர்த்து வழக்கு சொத்து பாதை என்பதை காட்டக்கூடிய ஆவணம் எதுவும் எங்களது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு நன்கு தெரிந்தும் வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. சாட்சியம் அளிப்பதற்கு முன்பாக வழக்கு விபரங்கள் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தற்போது நினைவில் இல்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு எங்களது தரப்பில் ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் தாவா சொத்து காலி இடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. வழக்கு சொத்து உண்மையில் பாதையாக இருக்கும் நிலையில் நாகமலைபுதுக்கோட்டை ஊராட்சியில் இருந்து சாலை அமைத்திருப்பார்கள் என்றாலும் வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பட்டா இடம் என்பதால் ஊராட்சியில் இருந்து சாலை எதுவும் அமைக்கவில்லை என்றால் சரியல்ல.

11. வாதிகள் கவனக்குறைவாக தவறாக எழுதிகொடுத்த நான்குமாலை அடிப்படையாக கொண்டு வாதிகளுக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் 01.04.2010 ல் வாதிகள் அனுபவத்தில் இடையூறு செய்ததால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது

என்றால் சரியல்ல. வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதால் வாதிகள் கோரும் பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.02.26 11:35:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.